தமிழ்நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திருமதி. ம. ஆர்த்தி, இ.ஆ.ப.

ந.க. எண் : 2349/ஆ 2/நா.மு - 1/ஒபக/2023, நாள்:23.08.2023

பொருள் : ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி – நான் முதல்வன் திட்டம் - 2023 -2024 கல்வியாண்டு - 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிக்காட்டி கையேடு – மாதவாரியாக பாடத்திட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து.

.........

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இக்கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிக்காட்டி கையேடு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பொருள் சார்ந்த வகுப்புகள் வருகின்ற ஆகஸ்ட் இரண்டாம் வாரம் முதல் நடத்துவதற்கான பாடவேளைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்காணுமாறு வழங்கப்பட்டுள்ளது.

| WEEK / DAY | PERIOD ALLOTTED | CLASS | GROUP |
|---|---|---|---|
| இரண்டாம் வார புதன் கிழமை (2nd Wednesday of every month) | 7th & 8th period | XI | All Combinations of I & II Groups |
| இரண்டாம் வார வெள்ளிக்கிழமை (2nd Friday of every month) | 7th & 8th period | XII | All Combinations of I & II Groups |
| நான்காவது வார புதன்கிழமை (4th Wednesday of every month) | 7th & 8th period | XI | All Combinations of III Group & Vocational / Agri |
| நான்காவது வார வெள்ளிக்கிழமை (4th Friday of every month) | 7th & 8th period | XII | All Combinations of III Group & Vocational / Agri |

Scanned with OKEN Scanner

எனவே, தற்போது 2023 -2024 ம் கல்வியாண்டில் ஆகஸ்ட் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் சார்ந்த பாடத்திட்டம் மாதவாரியாக கீழ்காணுமாறு வழங்கப்பட்டுள்ளது.

| மாதம் | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|
| ஆகஸ்ட் 2023 | XI | 1. நம்மை நாம் புரிந்துக்கொள்ளுதல் |
| | XII | 1. நம்மை நாம் புரிந்துக்கொள்ளுதல் |
| | XII | 2. உயர் கல்விப் படிப்புகளைப் புரிந்துக்கொள்ளுதல் |
| செப்டம்பர் 2023 | XI | 2. உயர் கல்விப் படிப்புகளைப் புரிந்துக்கொள்ளுதல் |
| | XI | மதிப்பீடு (Assessment) |
| | XII | 3. மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் |
| | XII | 4. உயர்கல்வியில் சேருவதற்கான முன்தயரிப்புகள் |
| | XII | 5. அச்சம் தவிர் ! |
| | XII | மதிப்பீடு (Assessment) |
| அக்டோபர் 2023 | XI | 3. மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் |
| | XII | 6. உயர்கல்விப் படிக்கட்டுகள் |
| | XII | 7. உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள் |
| நவம்பர் 2023 | XI | 4. உயர்கல்வியில் சேருவதற்கான முன்தயரிப்புகள் |
| | XI | மதிப்பீடு (Assessment) |
| | XII | 8. வேலை உலகைப் புரிந்துக்கொள்ளுதல் |
| | XII | 9. வேலை குறித்த கண்ணோட்டம் |
| | XII | மதிப்பீடு (Assessment) |
| டிசம்பர் 2023 | XI | 5. அச்சம் தவிர் ! |
| | XII | 10. வேலை சார்ந்த நம்பிக்கைகள் |
| | XII | 11. வேலை வாய்ப்புத் தகவல்கள் |
| | XI | 6. உயர்கல்விப் படிக்கட்டுகள் |

| | | |
|---|---|---|
| ஜனவரி 2024 | XI | 7. உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள் |
| | XII | 12. வேலை வாய்ப்பை பெறுவதற்காக முன்தயாரிப்புகள் |
| | XII | 13. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல் |
| | XII | 14. நாம் எதிர் கொள்ள கூடிய சவால்கள் |
| பிப்ரவரி 2024 | XI | மதிப்பீடு (Assessment) |
| | XII | மதிப்பீடு (Assessment) |

<u>பொறுப்புகளும் கடமைகளும்</u>

<u>அ. தலைமையாசிரியர்கள்:</u>

- அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட மாதவாரியாக கற்பிக்கப்பட வேண்டிய உயர்கல்வி வழிக்காட்டி பாடத் திட்டங்களை தங்கள் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு (CG Teacher Counsellor) உடனடியாக வழங்குதல் வேண்டும்.
- உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி வகுப்புகள் பள்ளியின் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்தில் (HI-TECH LAB) நடத்தப்பட வேண்டும்.
- தொழிற்சார் (Vocational) மாணவர்களை பொறியில் படிப்புகள் தொடர்பான வகுப்புகளின் போது 1st குரூப் மாணவர்களுடனும் கலைப் படிப்புகள் தொடர்பான வகுப்புகளின் போது 3rd குரூப் மாணவர்களுடனும் இனணத்து வகுப்புகளை நடத்துதல் வேண்டும்.
- உயர்கல்விக்கான வழிகாட்டுதல்கள் வழங்க பள்ளிக்கு அழைத்து வரப்படும் துறைசார் வல்லுநர்கள்/தொண்டு நிறுவனங்கள் (NGOs) ஒதுக்கப்பட்டுள்ள பாட வேளைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
- உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர் பயிற்றுநர்கள் உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிக்காட்டி கையேட்டில் உள்ள விவரங்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் கற்பிக்கப்படுகின்றனவா என்பதனையும், அதன் மூலம் மாணவர்கள் பயனடைந்துள்ளனரா என்பதனையும் தலைமையாசிரியர்

Scanned with OKEN Scanner

பார்வையிட்டு EMIS SCHOOL LOGIN – Staff Pindics Form இல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

- அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மதிப்பீடுக்காக (Assessment) ஒதுக்கப்பட்டுள்ள நாட்களில் தவறாது நடத்துதல் வேண்டும்.

<u>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்</u>

- வழங்கப்பட்டுள்ள உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிக்காட்டி பாட அட்டவணை விவரங்களை கையில் வைத்திருத்தல் வேண்டும்.
- மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் மேற்கூறியவாறு அனைத்து மாணவர்களுக்கும் மாதவாரிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- தேசிய பல்கலைக் கழகங்கள் / உயர்கல்வி நுழைவுத் தேர்வுகள் குறித்த விவரங்கள் சுற்றறிக்கைகளாக இயக்குநரகத்தில் இருந்து அனுப்பபட்டு வருகின்றன. சார்ந்த மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் பயிற்றுநர்களுடன் இணைந்து விருப்பம் தெரிவித்த மாணவர்களை குறித்த நாட்களுக்குள் விண்ணப்பம் செய்திட உதவ வேண்டும்.

<u>உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள்</u>

- ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் உள்ள உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் தலைமையாசிரியரின் வழிகாட்டுதலுக்கிணங்க, உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் வழங்கப்பட்டுள்ள பாடங்களை மாணவர்களுக்கு கற்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
- 2023 ஆகஸ்ட் மாதம் முதல் 2024 பிப்ரவரி மாதம் வரை கொடுக்கப்பட்டுள்ள பாட வேளைகளில் மொத்தம் 14 வகுப்புகள் உயர்கல்வி சார்ந்து நடத்தப்பட வேண்டும்.
- அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் உள்ள உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் இணைத்து இருக்கின்ற telegram குழுவில் தொடர்ச்சியான விளக்கங்கள் மற்றும் உரையாடல்கள் பதிவிடல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

➢ தேசிய பல்கலைக் கழகங்கள் / உயர்கல்வி நுழைவுத் தேர்வுகள் குறித்த விவரங்கள் சுற்றறிக்கைகளாக இயக்குநரகத்தில் இருந்து அனுப்பபட்டு வருகின்றன. சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து விருப்பம் தெரிவித்த மாணவர்களை குறித்த நாட்களுக்குள் விண்ணப்பம் செய்திட உதவ வேண்டும்.

எனவே அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் இச்செயல்முறைகளை அனைத்து மேல்நிலைப்பள்ளிகளுக்கும் வழங்கி மேற்கூறப்பட்டுள்ளவாறு உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி ஆசிரியர்கள் வாயிலாக அனைத்து மாணவர்களுக்கு கற்பிக்கவும் அதன் மூலம் மாணவர்கள் பயனடைவதை உறுதி செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : 11 மற்றும் 12 ஆம் வகுப்பிற்க்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிக்காட்டி பாடத் திட்டம்

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்

நகல்

(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)

1. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
2. அனைத்து தலைமை ஆசிரியர்கள் (அரசு மேல்நிலைப் பள்ளிகள் )

Scanned with OKEN Scanner